3801

Register Number | | | | | | |

# தமிழ் - முதல் தாள்

# Language – Part A – TAMIL – Paper I

நேரம் : 2 $\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்பு : i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

ii) வினா எண் IV - க்குச் செய்யுள் வடிவில் விடை எழுதுதல் வேண்டும்.

I. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் எட்டனுக்கு மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : $8 \times 2 = 16$

1. அறநெறி ஏன் ஓங்குதல் வேண்டும் ?
2. எவ்விரண்டில் எல்லா அறங்களும் உள்ளன ?
3. வலிமையில்லாதவரும் வெல்வர் - எப்பொழுது ?
4. மண் தேய்த்த புகழினான் - விளக்குக.
5. அனுமன் கண்ட சீதையின் நிலை யாது ?
6. சொல்லுதற்கு அரிய மலை எது ? அது யாருக்குரியது ?
7. பிள்ளைத் தமிழ் - இலக்கணம் கூறுக.
8. பாரத நாட்டுக்கு எல்லைகளாக அமைந்து காத்திடுவன எவை ?
9. பிளந்தார், அளந்தார் எவற்றை ?
10. புத்தர் எதை மொழிந்தார் ? எதற்கு உழந்தார் ?

[ Turn over

II. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : $3 \times 5 = 15$

11. தமிழின் சிறப்புகளை விளக்குக.

12. புகழுடையார் எய்தும் மேன்மையை விளக்குக.

13. கண்ணகியை இளங்கோவடிகள் எவ்வாறு அறிமுகப்படுத்துகிறார் ?

14. திருந்திய திருடன் மற்றொரு திருடனிடம் கூறியவற்றை எழுதுக.

15. கழுமல வளநகர்ப் பெருந்தகையை ஞானசம்பந்தர் எங்ஙனம் போற்றுகின்றார் ?

III. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக : $1 \times 7 = 7$

16. ஊக்கமே சிறந்ததென்பதனையும், அதனை உடையாரது உயர்ச்சியையும் விளக்கி எழுதுக.

17. கம்பர், அனுமன் வாயிலாக உரைத்த் அறநெறிகள் யாவை ?

18. குமர குருபரர் மீனாட்சியம்மையினை எவ்வாறு சிறப்பித்துள்ளார் ?

19. 'சுற்றுப்புறச் சூழலைக் காத்திடுவோம்' என்னுந் தலைப்பில் கவிஞர் பூங்கோவன் குறிப்பிடும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

IV. பின்வருவனவற்றை அடிபிறழாமல் எழுதுக : $2 + 2 + 3 + 3 = 10$

20. 'தோன்றின்' எனத் தொடங்கும் குறளையும் 'நிலம்' என முடியும் குறளையும் எழுதுக.

21. 'பிறர்தன்னை' எனத் தொடங்கும் திரிகடுகப் பாடலையும், 'பேண நோற்றது மனைப்பிறவி' என்ற கம்ப இராமாயணப் பாடலையும் அடி பிறழாமல் எழுது.

V. கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக : 10 × 1 = 10

22. திரிகடுகத்தை இயற்றியவர்

அ) காரியாசான்

ஆ) நல்லாதனார்

இ) கணிமேதையார்.

23. நெஞ்சை அள்ளுஞ்சிலப்பதிகாரம் என்று பாடியவர்

அ) பாரதிதாசன்

ஆ) கவிமணி

இ) பாரதியார்.

24. கண்ணுறும் கடலின் காட்சி

கவின்மிகு காட்சியம்மா! - இத் தொடரில் .................... அமைந்துள்ளது.

அ) மோனை

ஆ) எதுகை

இ) இயைபு.

25. நிலா ஒளியைக் ........................ (கலை/களை) என்பர்.

26. குறுந்தொகையிலுள்ள பாடல்களின் எண்ணிக்கை

அ) 402

ஆ) 502

இ) 603.

27. புறநானூறு என்னும் தொடரைப் பிரிக்கும் முறை

அ) புற + நானூறு

ஆ) புறநா + நூறு

இ) புறம் + நான்கு + நூறு.

28. பொருத்துக :

| *சொல்* | *பொருள்* |
|---|---|
| பொதும்பர் | தோள் |
| புயம் | சினம் |
| | சோலை. |

29. தமிழ் வேந்தர் வெளியிட்ட சின்னக்காசு

அ) நிலவு

ஆ) விண்மீன்

இ) செங்கதிரோன்.

30. கீழ்க்காணும் குறட்பாவைச் சீர் பிரித்து எழுதுக.

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு

நிலத்தறைந்தான் கைபிழையாதற்று.

31. கோடிட்ட இடங்களில் சரியான எழுத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

குன்றாத நச......யன் யூத.........க்குக் குலவேந்தன்

(ரே / றே) (ரு / று)

VI. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 5 × 2 = 10

32. இந்தியாவில் ஏராளமாக உள்ள தாதுவகைகள் யாவை ?

33. அரங்கேற்றம் பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.

34. மு.வ. அவர்களுடைய நெஞ்சில் இனிப்பது எது ?

35. ஈரோடு நகராட்சித் தலைவராக இருந்தபோது பெரியார் செய்த பணிகள் யாவை ?

36. கலிலியோ கண்ட உண்மை யாது ?

37. மனைமாட்சியை எக்குறளுக்கு இலக்காக அமைக்க வேண்டும் ?

38. கடிகை முத்துப் புலவர் இயற்றிய நூல்கள் யாவை ?

[ Turn over

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 3 × 5 = 15

39. வண்ணம் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

40. எவற்றை மேன்மேலும் படிக்க வேண்டும் என மு.வ. விரும்புகிறார் ?

41. இமயமலையையும் பெரியாரையும் நெ.து.சு. எவ்வாறு ஒப்பிடுகிறார் ?

42. உமறுப் புலவரின் நன்றி மறவாப் பண்பினை விளக்குக.

43. ஔவையார் தம் வாய் யார் யாரைப் பாடியதாகக் கூறிப் பெருமைப்படுகிறார் ?

VIII. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் ( பதினைந்து வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 1 × 7 = 7

44. அனைவரும் கல்வி பெற வேண்டும் என்பதைத் திரு.வி.க எவ்வாறு விளக்குகிறார் ?

45. வ.உ.சி. அவர்களின் செய்ந்நன்றி மறவாப் பண்பினை விளக்கி எழுதுக.

46. பெரியாரின் மதுவிலக்குத் தொண்டு பற்றித் தொகுத்து எழுதுக.

47. மனையியலும் கல்வியும் ஒன்றே - விளக்குக.

IX. கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக : 10 × 1 = 10

48. 2010 ஆம் ஆண்டிற்கு முன்னதாகவே இந்தியாவிலிருந்து ஒழிக்கப்பட வேண்டியது ............... .

அ) கல்லாமை

ஆ) வறுமை

இ) வேலையில்லாத் திண்டாட்டம்.

49. நட்புக்குக் கரும்பை உவமையாகச் சொன்ன இலக்கியம் .............. .

அ) திரிகடுகம்

ஆ) பழமொழி

இ) நாலடியார்.

50. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக.

ஈரோட்டு சிங்கம் - ஈ.வெ.ராவின் தனி சிறப்புகள் சில. அவையாவன உரிமைக்காக போராடும் தன்மை ; பொதுநல போராட்டங்களுக்காக எதையும் தியாகஞ் செய்தல்.

51. கீழ்க்காணும் வாக்கியம் எவ்வகை வாக்கியம் ?

சாத்தனார் ஏன் இந்தப் பளிங்குச் சோதனையில் இறங்கினார்

52. பொருத்துக :

| | | |
|---|---|---|
| அண்ணா பல்கலைக் கழகம் | — | மதுரை |
| மனையியல் பல்கலைக் கழகம் | — | சென்னை |
| | — | கோவை. |

53. வேற்றுமை உருபைச் சேர்த்து எழுதுக.

புறவுலக ஆராய்ச்சி ................ 'விஞ்ஞானம்' கொழுகொம்பு போன்றது.
( ஐ, ஆல், கு, இன் )

54. கீழ்க்காணும் உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்றுக :

அ) மலரடி

ஆ) தாமரை முகம்.

[ Turn over

55. கீழ்க்காணும் சொற்களுள் இருபொருள் தரும் ஏதேனும் ஒரு சொல்லை எழுதி, அச்சொல் தரும் இரு பொருளையும் எழுதுக.

அ) நகை

ஆ) மாலை

இ) நூல்

ஈ) திங்கள்.

56. கீழ்க்காணும் தொடரில் ஒருமை - பன்மை பிழை நீக்கி எழுதுக.

உமறுவிடம் வித்தையின் வித்துகள் வேரூன்றி முளைத்துக் கிளைத்திருந்தது.

57. கீழ்க்காணும் தொகைச் சொற்களுள் ஒன்றினை விரித்து எழுதுக :

அ) இருவினை

ஆ) முத்தமிழ்.